HERSHEY

# பொறுப்புள்ள மூலாக்கம் திட்ட வழிகாட்டிப் புத்தகம்

பொறுப்புள்ள மூலாக்கக் குழு

மார்ச் 2020

## A. வரவேற்பு & அறிமுகம்

நல்லதைச் செய்வதால் நலமாக இருக்கலாம் என்ற கொள்கையுடன் Hershey நிறுவனம் நிறுவப்பட்டது. கடந்த 125 வருடங்களுக்கும் மேலாக, நாம் வாழும் மற்றும் பணிபுரியும் சமூகங்களின் ஒருங்கிணைந்த உறுப்பினர்கள் நாம் என்பதை நிரூபித்தவாறு நாங்கள் எங்கள் வணிகத்தை நடத்தியுள்ளோம்.

நமது வழங்கல் சங்கிலியில் உள்ள ஒவ்வொரு படிநிலையும் மக்கள், சமூகங்கள் மற்றும் பூமியின் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பதை Hershey அங்கீகரிக்கிறது. இதன் விளைவாக, எங்கள் வழங்கல் சங்கிலி முழுவதும் வலுவான சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை வணிகத் தரங்களைச் செயல்படுத்துவதற்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். இறுதியில், எங்கள் நீண்டகால வெற்றியானது எங்கள் மதிப்புச் சங்கிலி மற்றும் நாங்கள் உருவாக்கும் பொருட்களின் நிலைத்தன்மையை முழுமையாக்குபவர்களான தனிநபர்களின் உரிமைகளை மதிப்பதைப் பொறுத்தே உள்ளது.

எமது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் சுவையான, உயர்-தரத்திலான தயாரிப்புகளை வழங்குவதற்கு எங்கள் உலகளாவிய சப்ளையர்கள் நெட்வொர்க் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்றியும் நிலையாகவும் பணிபுரியும் வணிகக் கூட்டாளர்களை Hershey சார்ந்துள்ளது. உங்களில் பலரைப் போலவே, தொடர்ச்சியான முன்னேற்ற மனநிலை, ஒரு கூட்டு அணுகுமுறை மற்றும் செயலுக்கான ஒரு சார்பு ஆகியவற்றை நாங்கள் பயன்படுத்துகிறோம், இணைந்து பணியாற்றுவதன் மூலமாக நாம் மிகப் பெரிய மற்றும் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் பயனை அடையலாம். பகிரப்பட்ட நன்மையின் பல நல்ல தருணங்களை உருவாக்கவும் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் உங்கள் கூட்டாண்மையை வரவேற்கிறோம்.

உண்மையுள்ள,

ஜேசன் ரீமன்

ஜேசன் ரீமன், மூத்த துணைத் தலைவர், முதன்மை வழங்கல் சங்கிலி அலுவலர்

## B. எங்கள் கடமைகள் & எதிர்பார்ப்புகள்

நாணயம் மற்றும் முதன்மைநிலை ஆகியவற்றுடன் செயல்படுவதுதான் Hershey நிறுவனத்தின் இரண்டு மூலாதாரமான மதிப்பீடுகளாகும். பொறுப்புள்ள மூலாக்கத்தைப் பொருத்தவரை, மனித உரிமைகளுக்கான கடமைகள் தொழிலாளர் தரநிலைகள், சுற்றுச்சூழல், உடல்நலம் மற்றும் பாதுகாப்பு, வணிக நெறிமுறைகள், மற்றும் மாறுபட்ட மற்றும் நிலையான வழங்கல் சங்கிலியின் மேம்பாடு உள்ளிட்டவற்றிற்கான Hershey இன் எதிர்பார்ப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களை எங்கள் சப்ளையர்களுக்கான நன்னடத்தைக் கோட்பாடு விளக்குகிறது.



சப்ளையர்களுக்கான நன்னடத்தைக் கோட்பாடுகள் மற்றும் பிற தொடர்புடைய கொள்கைகளுக்கு[1] இணங்கிச் செல்வதை உறுதிசெய்யுமாறு அனைத்து சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களிடமும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். சப்ளையர்களுக்கான நன்னடத்தைக் கோட்பாடு மற்றும் தொடர்புடைய கொள்கைகளுக்கு வழங்கல் சங்கிலி முழுமைக்கும் கருத்துப்பரிமாற்றம் மற்றும் தொடர்ச்சியான தகவல் அளிக்குமாறு சப்ளையர்களும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

எங்கள் சப்ளையர்கள் தாங்கள் செயல்படும் சந்தைகளில் பொருத்தமான அனைத்து தேசிய, மாநில, மற்றும் உள்ளூர் சட்டங்கள்/ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்படுமாறு நாங்கள் எதிர்பார்க்கிறோம், எனினும் எங்கு உள்ளூர் சட்டங்கள், அல்லது தரநிலைகள், சப்ளையருக்கான நன்னடத்தைக் கோட்பாட்டில் இருந்து மாறுபட்டிருக்கிறதோ, அங்கு சப்ளையர்கள் மிகவும் கடுமையான தரநிலைகள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்கிச்செல்வதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

[1] பண்ணை விலங்குகளின் நல நிலை https://www.thehersheycompany.com/content/dam/corporate-us/documents/legal/farm-animal-welfare-position.pdf
கூழ் மற்றும் காகித மூலாக்கக் கொள்கை https://www.thehersheycompany.com/content/dam/corporate-us/documents/legal/pulp-and-paper-sourcing-policy.pdf
பொறுப்புள்ள பாமாயில் மூலாக்கக் கொள்கை https://www.thehersheycompany.com/content/dam/corporate-us/documents/legal/palm-sourcing-policy.pdf
வளம் குன்றா சர்க்கரை மூலாக்கக் கொள்கை https://www.thehersheycompany.com/content/dam/corporate-us/documents/legal/sugar-sourcing-policy.pdf

# C. சரிபார்ப்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாடு

எங்கள் சப்ளையர் சங்கிலியில் உள்ள சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளை மேம்படுத்தும் எங்கள் தீர்க்கதரிசனத்திற்கு எங்கள் சப்ளையர்களின் சொந்த பொறுப்புள்ள மூலமாக்கல் பயணம் முக்கியமானது என்பதை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். இதனை அடைவதற்கு, Hershey நிறுவனத்தின் பொறுப்புள்ள மூலமாக்கல் சப்ளையர் திட்டத்தின் ஒரு பகுதியான சப்ளையரின் வளர்ச்சி மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு உதவுவதற்காக Hershey அவுட்சோர்ஸ் நிரல் மேலாண்மை சேவைகளின் உலகளாவிய முன்னணி வழங்குநரான Intertek உடன் கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது. பொறுப்புள்ள மூலமாக்கல் வழங்கல் திட்டத்திற்கு மிகச்சரியான அளவிலான ஈடுபாட்டுடன் சப்ளையர்களின் பங்களிப்புக்கு உதவுதல் மற்றும் அதன் தேவைகள் சரியான முறையில் பகிரப்படுவதை உறுதிசெய்வதற்காக Intertek திட்ட மேலாளர்கள் (IPMs) இந்தத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

Hershey நிறுவனம் எங்களுடைய சப்ளையர்களுடன் இணைந்து இலக்குகளை அடையும் பயணத்தில், தொடர் முன்னேற்றம் மற்றும் அடுத்தக்கட்ட செயல்பாடுகளுக்கு முடிந்த வரையில் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்கிறது. இணக்கத்தைச் சரிபார்க்கும் போது, சப்ளையர் மற்றும் வணிக கூட்டாளர் நிர்வாக அமைப்புகளை அணுகுவதற்கும் மதிப்பாய்வு செய்வதற்கும் Hershey நிறுவனத்திற்கு உரிமை உள்ளது. மேலும், சுய-மதிப்பீடு கேள்விகள் மூலமாக செயலாக்குவதற்கும், தரநிலைகள் மற்றும் பதிவுகளை அணுகுவதற்கும், மூன்றாம் தரப்பு-சமூக தணிக்கை மற்றும்/அல்லது பிற தொழிலாளர் மைய மாதிரிகளை அணுகுவதற்கும் Hershey நிறுவனத்திற்கு உரிமை உள்ளது. அபரிமிதமான வளரச்சியை அடைவதற்காக, எங்களுடைய சப்ளையர் நடத்தை விதிமுறைகளுடன் முழுமையாக இணைந்த ஒரு வழங்கல் சங்கிலியை அடைவதற்கும், தக்கவைத்துக்கொள்வதற்கும் தேவையான எந்தவொரு செயல்திறன் இடைவெளிகளையும் நிவர்த்தி செய்யும் வகையில், எங்கள் சப்ளையர்கள் மற்றும் வர்த்தக கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதே எங்கள் லட்சியம்.

எங்களது சப்ளையர் நெறியுடன் இணங்கலைச் சரிபார்ப்பதற்கு எந்த சப்ளையரும் தேவைப்படலாம் என்ற நிலையிலும், எங்களுடைய சப்ளையர் மற்றும் வணிக கூட்டாளர் நெட்வொர்க்கானது முற்றிலும் விரிவானதும், வேறுபட்டதுமாகவே இருக்கும். இதன் விளைவாக,மனித உரிமைகள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அல்லது முக்கியத்துவம் அளிப்பதற்கும், நீண்டகால வர்த்தக உத்திக்கும் அதிக ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலான செயல்பாடுகள், நடவடிக்கைகளில் ஈடுபடும் சப்ளையர்கள் மற்றும் வணிக கூட்டாளர்களுடன் எங்கள் குறியீட்டைச் சரிபார்த்து Hershey நிறுவனம் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கும். நியாயமான, பொறுப்பான சவால்களுக்கு சில அடிப்படை சிக்கல்களை எதிர்கொள்ளும் திட்டங்கள் வரையறுக்கப்படுகிறது. அந்தத் திட்டங்களை வழங்கவும், அதற்கான நடைமுறைகளை மேம்படுத்தி எங்களுக்கு உதவும் தனித்துவம் பெற்ற சப்ளையர்களுடனும், வர்த்தக கூட்டாளர்களுடனும் ஒரு கூட்டாண்மைகளை உருவாக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.

Hershey நிறுவனம் மதிப்பெண் முறை மூலம் நான்கு வகையான காரணிகளைக் கொண்ட பரிமாணங்களில் ஆபத்தை மதிப்பீடு செய்கிறது. அவை: மனித உரிமைகள் ஆபத்து வகைகள் இரண்டு (புவியியல் மற்றும் மதிப்பு சங்கிலி), வர்த்தக ஆபத்து வகைகள் இரண்டு (செலவு மற்றும் எங்களுடைய உறவின் தன்மை). எங்கள் மதிப்பெண் முறையைப் பூர்த்திசெய்து, சுற்றுச்சூழல் மற்றும் சப்ளையர் பன்முகத்தன்மை உள்ளிட்ட எங்கள் பரந்த நிலைத்தன்மை கடமைகளையும் Hershey இன் ஆபத்துப் பிரிவு கவனத்தில் கொள்கிறது.

Hershey இன் எதிர்பார்ப்புகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக, Hershey இன் பொறுப்பு ஆதார சப்ளையர் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொடர்ச்சியான செயல்பாடுகளின் மூலம் எங்கள் சப்ளையர்கள் மற்றும் வர்த்தக கூட்டாளர்கள் பங்கேற்பார்கள். Hershey நடத்திய எங்கள் ஆபத்து மதிப்பீடு, சப்ளையர் நடத்தை விதிமுறை ஒப்புதல், சுய மதிப்பீட்டு கேள்வித்தாள் (SAQ) மற்றும் தேவைக்கேற்ப, ஆன்-சைட் சமூக இணக்க தணிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும்.

**நடத்தை விதிமுறை ஒப்புதல்**

சப்ளையருக்கான புதிய நடத்தை விதிகளுக்கு சப்ளையர் ஒப்புதல்
*(வருடாந்தர தேவை)*

→

**சுய-மதிப்பீட்டு வினாப்பட்டியல் (SAQ)**

Sedexல் இணைந்து சுய-மதிப்பீட்டு வினாப்பட்டியலைப் பூர்த்தி செய்தல்
*(வருடாந்தர தேவை)*

→

**சப்ளையருக்கான ஆன்-சைட் தணிக்கை**

SMETA 4-பில்லர் தணிக்கை அல்லது பரஸ்பர அங்கீகரிப்புத் தணிக்கையை (MRA) மேற்கொள்ளவும்
*(Hershey காலக்கோடு)*

→

**திருத்தும் செயல் திட்டம் (CAP)**

இணங்காதவற்றை சரிசெய்ய CAP ஐ நிறைவுசெய்யவும் மற்றும் பின்தொடர்தல் தணிக்கை மூலம் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவும்
*(பொருந்தக்கூடிய இடத்தில்)*

### படிநிலை 1: புரிந்து கொள்ளுதல், ஒன்றுபடுதல் மற்றும் எங்களுடைய பங்களிப்புகளைப் பகிர்தல்

- **புரிந்து கொள்ளுதல்:** Hershey நிறுவனத்தின் சப்ளையர் நடத்தை விதிமுறை, எங்களுடைய பொறுப்புள்ள மூலாக்கக் குழு கடமைகள், எங்களுடைய மனித உரிமைகளும் சுற்றுச்சூழல் கொள்கைகளும் மற்றும் இந்தப் பொறுப்புள்ள மூலாக்க திட்ட வழிகாட்டிப் புத்தகத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள தேவைகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு உங்களைப் பழக்கப்படுத்தவும்.
- **ஒன்றுபடுதல்:** இந்த வழிகாட்டி புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உங்கள் வசதியை எங்கள் சப்ளையர் நடத்தை விதிமுறைகளுடன் ஒன்றுபட்டு வேலை செய்ய முடியும்.
- **பகிர்தல்:** உங்கள் சொந்த விநியோகச் சங்கிலி முழுவதும் Hershey இன் சப்ளையர் நடத்தை விதிமுறைகளுடன் தொடர்புகொள்வது மற்றும் தேவைப்படுவதுடன், எங்கள் தரங்களுடன் உங்கள் சப்ளையர்களின் இணக்கத்தை நிரூபிக்கவும் சரிபார்க்கவும் பொருத்தமான நிர்வாக அமைப்புகளை வைத்திருங்கள்.

### படிநிலை 2: SEDEX இல் இணைந்து உங்கள் சுய-மதிப்பீட்டு வினாப்பட்டியலை (SAQ) HERSHEY உடன் பகிருங்கள்

- Sedex இல் இணைந்து Hershey நிறுவனத்துடனான உறவைத் தொடங்குங்கள்: தனது சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள் உலகின் முன்னணி நெறிமுறைகளுடனான வணிக சேவை வழங்குநர்களில் ஒருவரான Sedex இல் இணையுமாறு Hershey உறுதியுடன் ஊக்குவிக்கிறது. Sedex இல் இணைவதால் சமூக இணக்கத் தணிக்கை முயற்சிகள் மற்றும் தொடர்புடைய வளங்களின் நகலைக் குறைக்கிறது, தொழில்-தரத்திலான வடிவத்தில் பல வாங்குபவர்களுக்குத் தணிக்கை அறிக்கைகள் மற்றும் தகவல்களை சப்ளையர்கள் பகிரும் முறையை எளிதாக்குகிறது. Sedex இல் இணைவதால், சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களும் பரந்த அளவிலான திறன் மேம்பாட்டுக் கருவிகள் மற்றும் வளங்கள் உள்ளிட்ட பொறுப்பான மற்றும் நிலையான வணிக நடைமுறைகளை மேம்படுத்த உதவும் சமூக வலைப்பின்னல் மூலம் பயனடைவார்கள். இணைந்த பின்னர், Hershey நிறுவனத்துடனான உறவைத் தொடங்குங்கள் (Sedex குறிப்பு எண்: ZC1090865) இதன் மூலம் நாம் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.



Sedex இல் இணைவதற்கு, பார்க்கவும்: https://www.sedexglobal.com/join-sedex/supplier/

- முழுமையான சுய-மதிப்பீட்டு வினாப்பட்டியல் (SAQ): Hershey இன் பொறுப்புள்ள மூலாக்க சப்ளையர் திட்டத்திற்கு இணங்கிச் செல்வதற்கு, நீங்கள் வருடாந்தர முறையில் Sedex சுய-மதிப்பீட்டு வினாப்பட்டியல்களைப் புதுப்பிக்க வேண்டும். Intertek திட்ட மேலாளர்களால் மின்னஞ்சல் மூலம் வழங்குபவர்களுக்கு அறிவிப்பு தரப்படும், மேலும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பதிலளிக்க வேண்டும். உங்கள் வணிக நடைமுறையில் உள்ள சாதகமான அம்சங்கள் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை எடுத்துக்காட்டுவதற்கான ஒரு முக்கியமான கருவி Sedex SAQ ஆகும். தணிக்கை மற்றும் பிற மதிப்பீடுகளில் பின்தொடர்தல் தேவைப்படக்கூடிய சிக்கல்களை அடையாளம் காண Hershey தனது ஒட்டுமொத்த வழங்கல் சங்கிலி மேலாண்மை முயற்சிகளுக்காக SAQ ஐப் பயன்படுத்துகிறது. சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள் Sedex அல்லாத மாற்று SAQ ஐ வைத்திருந்தால் Hershey அதனை மதிப்பாய்வு செய்து அந்தந்த சிக்கலை அடிப்படையாகக் கொண்டு SAQ ஐ ஏற்றுக்கொள்ளும்.



### படிநிலை 3: சரிபார்க்கவும்

- சப்ளையருக்கான ஆன்-சைட் தணிக்கை: SMETA 4 –பில்லர் சமூக இணக்கத் தணிக்கை அல்லது அதற்கு நிகரான Hersheyயின் பொறுப்புள்ள மூலாக்க சப்ளையர் திட்டத்திற்கான வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப மற்றும் Hersheyயால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஒன்றிற்கு சப்ளையர் உட்பட வேண்டும் என Hershey விரும்புகிறது. அடையாளம் காணப்பட்ட இணக்கமில்லாமையின் அடிப்படையில் Hersheyயிடம் ஏற்கனவே உள்ள பிற தீர்வுகளுடன் திருத்தும் செயல் திட்டங்களின் நிலைநிறுத்தக்க தீர்வை உறுதிப்படுத்துவதற்காக (கணினி மதிப்பாய்வு அல்லது ஆன்சைட்) பின் தொடர்தல் தணிக்கைகளைப் பெறுவதற்கான உரிமையை Hershey தக்கவைத்துக்கொள்கிறது.

உங்கள் தளம் சமீபத்தில் சமூக இணக்கத்திற்கான ஆன்-சைட் தணிக்கையை நிறைவு செய்திருந்தால், அந்த அறிக்கையானது பரஸ்பர அங்கீகாரத் தணிக்கைச் (MRA) சேவைக்குத் தகுதி பெறும். MRA செயல்முறையில் கூடுதல் கேள்விகளுக்கு அல்லது Hershey ஏற்றுக்கொள்ளும் தரநிலைகளுக்கு உங்கள் IPM ஐ அணுகவும்.

பரஸ்பர அங்கீகரிப்பு
AIM-Progress உறுப்பினர் என்ற வகையில் தணிக்கை நகல், சோர்வு மற்றும் செலவு ஆகியவற்றைக் குறைக்கும் முயற்சியாக பரஸ்பர அங்கீகரிப்புச் செயல்முறையை Hershey ஆதரிக்கிறது. பரஸ்பர அங்கீகரிப்பு செயல்முறை வாயிலான மறு ஆய்வு தணிக்கைகளின் போது, திருத்தும் செயல் திட்டங்கள் (CAPRs) மற்றும் மூடல் தணிக்கை அறிக்கைகள் மதிப்பீடு மற்றும் எங்கள் சப்ளையரின் நடத்தை விதிகளுடன் வசதியின் இணக்கத்தைச் சரிபார்ப்பதற்காக Hershey தணிக்கை அறிக்கைகளை மறு ஆய்வு செய்யும். அறிக்கையை அங்கீகரிக்க Hershey கடமைப்படவில்லை மேலும் தணிக்கை முடிவுகள் மற்றும் அறிக்கையின் தரத்தைப் பொறுத்து கூடுதல் பின் தொடர்தல் அல்லது மதிப்பீட்டு அளவீடுகள் தேவைப்படலாம்.

## ஆன்-சைட் தணிக்கை செயல்முறை

பின்வரும் படிநிலைகள் Hershey அங்கீகரித்த கண்காணிப்பு நிறுவனத்துடன் ஆன்-சைட் தணிக்கை திட்டமிடல், ஆன்-சைட் தணிக்கை மற்றும் பின்தொடர்தல் ஆகியவை அடங்கும்




**1) தணிக்கை கோரிக்கை:** Intertek திட்ட மேலாளர்கள் (IPM) மின்னஞ்சல் வழியாக சப்ளையரை SMETA 4-பில்லர் தணிக்கைக்கு உட்படுத்துமாறு கோரிக்கை விடுப்பார்கள்.

**2) தணிக்கை திட்டமிடல்:** ஆன்-சைட் தணிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு நிறுவனத்துடன் திட்டமிடப்பட்டுள்ளன. தேர்வு செய்வதற்கான மேற்கோள் மற்றும் தணிக்கையாளர் உதவிப் பெறுவது தொடர்பான கோரிக்கை வைப்பதற்கு, நீங்கள் Hershey அங்கீகரித்த எந்தக் கண்காணிப்பு நிறுவனங்களையும் தொடர்பு கொள்ளலாம். நீங்கள் கண்காணிப்பு நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தப் பிறகு, உங்கள் IPMக்குத் தெரிவிக்கவும். Hershey அங்கீகரித்த கண்காணிப்பு நிறுவனங்களின் பட்டியலைப் பெறுவதற்கு, உங்கள் IPMஐத் தொடர்புகொள்ளவும்.

**3) ஆன்-சைட் ஆடிட்:** கூட்டத்தின் தொடக்கத்தில், தணிக்கையின் குறிக்கோள், நோக்கம், செயல்முறை மற்றும் அதன் பங்குகள் குறித்து வசதி மேலாண்மைக்கு அறிவுறுத்தப்படும். தனிக்கை செயல்பாட்டானது மேலாண்மை நேர்காணல், ஆவண மதிப்பாய்வு, வசதி சுற்றுப்பயணம், தனியார் பணியாளர்களுக்கான நேர்காணல், நிறைவுக் கூட்டம் ஆகியவற்றையும் கொண்டிருப்பதாகும்.

### தொழிலாளர் மேம்பாடு

எங்களுடைய விநியோகச் சங்கிலியில் தொழிலாளர் நல்வாழ்வைப் பற்றிய முழுமையான புரிதலைப் பெற தொழிலாளர்களின் நேரடி கருத்துக்களுக்கு Hershey முன்னுரிமை அளிக்கிறது. சமூக நல்லிணக்கம் தணிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்போது, தணிக்கையாளர் நேர்காணல் செய்வது மற்றும் தளத்தில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளர் புள்ளி விவரங்களில் இருந்து குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதியின் முன்னோக்கிய கருத்துக்களை உள்ளடக்குவது நிலையான நடைமுறையாகும்.

தணிக்கைக்கு வெளியே, தரநிலைகளுக்கு இணங்கியிருப்பதையும் தாண்டி, அதிக தொழிலாளர்களை மையப்படுத்திய செயல்களைச் செயல்படுத்துவதற்கான இடைவிடாத முயற்சிகளிலும், மேம்பட்ட தொழிலாளர் ஈடுபாட்டிற்கான பகுதிகளை தெரிவிப்பதில் ஒன்றிணைவதையும் ஊக்குவிக்கிறோம்.

**4) திருத்தப்பட்ட செயல் திட்ட மேலாண்மை:** கூட்டத்தின் முடிவில், திருத்தப்பட்ட செயல்திட்ட அறிக்கையை (CAPR) ஆடிட்டர் வழங்குவார். அதில், இணக்கமற்ற தணிக்கை , உற்றுநோக்குதலும் நல்ல நடைமுறையும் (ஏதேனும் இருந்தால்) சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கும். திருத்தப்பட்ட செயல் திட்டம் (CAP) முடிந்தவுடன் தள நிர்வாகம் அதனை Intertek திட்ட மேலாளருக்கு (IPM) அறிவிக்க வேண்டும். திருத்தப்பட்ட செயல் திட்டத்தில் உடனடி மற்றும் தடுப்பு திருத்த நடவடிக்கை, மூல காரண பகுப்பாய்வு மற்றும் தீர்வுக்கு பொறுப்பான நபர்(கள்) மற்றும் காலவரையறைகள் கோடிட்டிருக்க வேண்டும். முக்கியமான இணக்கமற்றவைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு பின் இணைப்பு Aஐப் பார்க்கவும்.

CAP இன் ஒரு பகுதியாக, இணக்கமற்றவற்றுக்கு வழிவகுக்கும் மூல(ங்களை) அல்லது காரணத்தை(ங்களை) பகுப்பாய்வு செய்வதற்கும் அடையாளம் காண்பதற்கும் ஒரு மூல காரண பகுப்பாய்வு (RCA) நடத்தப்பட வேண்டும்.

### அடிப்படை பிரச்சனைகளைப் புரிந்துக் கொள்வதற்கான பகுப்பாய்வு (RCA)

தணிக்கையின் போது, ஒரு பணியிட வசதியில் உள்ள ஒரு சிக்கல் வெளிப்படுகிறது - பல தீயணைப்பு கருவிகளில் இருந்த குறிப்பு அட்டைகள் காலாவதியாகி இருந்தன. தேவைப்படும்போது தீயணைப்புக் கருவிகள் முறையாகச் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில், பணியிட வசதியில் கண்டறியப்பட்ட இந்த இணக்கமில்லா சிக்கலை உடனடியாக சரிசெய்ய வேண்டியிருக்கும் அதே வேளையில், இந்த சிக்கல் ஏன், எப்படி நடந்தது என்பதைப் புரிந்துகொள்வதும் முக்கியம் ஆகும். இதனால் இந்த பணியிட வசதியின் பாதுகாப்பு அபாயத்திற்கு உட்படாது.

**அடிப்படை பிரச்சனைகளைப் பகுப்பாய்வு செய்வது (ஆர்.சி.ஏ) பணியிட வசதியின் தேவைகளைத் தீர்மானிக்க உதவலாம்:**

1) தீயணைப்பான்களின் ஆய்வு மற்றும் பராமரிப்புக்கான பொறுப்பு ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது;
2) பொறுப்பேற்றுக் கொண்ட நபருக்கு அதற்கான அறிவும் திறமையும் உள்ளது;
3) தீயணைப்பான்களை ஆய்வு செய்வதற்குப் போதுமான செயல்முறை உள்ளது;
4) அந்த செயல்முறை திறம்பட செயல்படுத்தப்படுகிறது, மற்றும்
5) தீயணைப்பான்களின் ஆய்வு மற்றும் பராமரிப்பு பற்றிய ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன.

ஒரு அடிப்படை காரணங்களைக் கண்டறியும் பகுப்பாய்வை நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பங்கள் மற்றும் வழிமுறைகள் ஒரு நிர்வாகத்தின் மேலாண்மை அமைப்பு மற்றும் செயல்முறைகளில் உள்ள இடைவெளிகளைப் புரிந்துகொள்ளவும், ஒரு நிலையான தீர்வை அடையாளம் காணவும், முன்னர் அடையாளம் காணப்பட்ட சிக்கல்களை மீண்டும் நிகழாமல் தடுக்க கண்காணிக்கவும் உதவும்.

# D. மேலாண்மை அமைப்புகளைப் புரிந்துகொள்தல் மற்றும் சப்ளை செயின் செயல்படுத்தும் முயற்சிகள்
## – பொறுப்பான வணிக செயல்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான முக்கிய காரணிக்கூறு

Hershey நிறுவனத்தின் சப்ளையர் குறியீடு, அவர்களின் சப்ளையர்கள் மற்றும் வணிக கூட்டாளர்கள் தங்கள் சப்ளை செயின் முழுவதும் அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை எட்ட வேண்டும் என எதிர்ப்பார்க்கிறது. பயனுள்ள மேலாண்மை அமைப்புகள் தளராத உழைப்புடன் கூடிய சப்ளையர் சங்கிலி [2] ஆகியவை எங்கள் சப்ளையர் குறியீட்டின் எதிர்பார்ப்புகள் எங்கள் அடுக்கு 1 நேரடி சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களையும் தாண்டி பூர்த்திசெய்யப்படுதை உறுதிசெய்வதற்கான முக்கிய கூறுகள் ஆகும்.

### சப்ளை செயின் வெளிப்படுத்தும் முயற்சியின் முக்கியத்துவம்

ஒரு சப்ளை செயின் செயல்படுத்தும் முயற்சி என்பது ஒரு வணிகத்தின்’ செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படக்கூடிய சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை அபாயங்களை நிர்வகிக்கும் செயல்முறையாகும். முறையாக செயல்படுத்தப்படும் முயற்சி என்பது, சப்ளையர் செயினின் அனைத்து அடுக்குகளிலும் பாதகமான மனித உரிமை பாதிப்புகள் மற்றும் பிற அபாயங்களை அடையாளம் காணவும், தடுக்கவும், குறைக்கவும் வேண்டும். செயல்பாட்டின் முக்கிய படிகள் பின்வருமாறு:

- மனித உரிமைகளை மதிக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மற்றும் கொள்கை அல்லது நிலை அறிக்கைகள் மூலம் நெறிமுறையுடன் செயல்படவும் கூடிய தெளிவான அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கிறோம்
- உண்மையான மற்றும் சாத்தியமான தாக்கங்களை அடையாளம் கண்டு மதிப்பிடுதல்
- அடையாளம் கண்டறியப்பட்டவைகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் உரியவாறு செயல்படுதல்
- செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகள்
- தாக்கங்கள் தீர்க்கப்படும் முறையைத் தெரிவித்தல்

ஒரு மேலாண்மை அமைப்பு என்பது ஒரு நிறுவனம் அதன் நோக்கங்களை அடைவதற்காக அதன் வணிகத்தின் இடை-தொடர்புடைய பகுதிகளை[3] நிர்வகிக்கும் வழியாகும். சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை தரங்களை வழங்குவது என்பது மற்ற பல வணிக தேவைகளைக் காட்டிலும் வேறுபட்டது இல்லை. Hershey முன்வைத்த செயல்திறன் மற்றும் சரியான விடாமுயற்சியின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய தேவையான மேலாண்மை அமைப்புகளை வைப்பதற்கு சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள் பொறுப்பு.

ஒரு அமைப்பின் அளவு மற்றும் சூழலைப் பொறுத்து மேலாண்மை அமைப்புகள் அவற்றின் முறைப்படி, சிக்கலான அளவில் வேறுபடலாம். சிறிய நிறுவனங்கள் எதிர்பார்ப்புகளைத் தெளிவாக உறுதியாகக் கோடிட்டுக் காட்டுவதற்கு வலுவான தலைவரை சார்ந்து செயல்படலாம். பெரிய அல்லது மிகவும் சிக்கலான வணிகங்கள் அவற்றின் நிறுவன நோக்கங்களைப் பூர்த்தி செய்ய விரிவான ஆவணங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கலாம். ஒட்டுமொத்தமாக, நல்ல வரையறுக்கப்பட்ட நிர்வாக அமைப்பானது, நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், உற்பத்தித்திறனுக்கும் ஆதரவு அளிக்க வேண்டும். அதே நேரத்தில், இடர் மேலாண்மையை மேம்படுத்துவது, மனித உரிமைகள், வணிக நெறிமுறைகள் அல்லது சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு தொடர்பான ஆபத்துகளை அடையாளங் காணுவது போன்றவையும் கொண்டிருக்க வேண்டும்.

நன்கு அறிந்த நிர்வாக அமைப்பு மாதிரிகளின் ஒன்றானது ‘திட்டமிடு-செயல்படு-சரிபார்-நிறைவேற்று’ ஆகும். அதாவது Plan-Do-Check-Act (PDCA Model) ஆகும். இந்த மாதிரியானது எளிதாக இருந்தாலும், குறிக்கோள்களை மதிப்பிடுவதற்கும், ஒரு காரியத்தைச் செயல்படுத்துவதற்கும், முடிவைக் கண்காணிப்பதற்கும், இறுதியாக முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதற்கும் ஒரு சிறந்த கட்டமைப்பை வழங்குகிறது.

[2] ISO https://www.iso.org/management-system-standards.html

[3] https://www.iso.org/management-system-standards.html

## PDCA மாடல்




**திட்டமிடல்:** குறிக்கோள்கள், கொள்கைகளை உருவாக்குதல், செயலாக்குதல், ஆபத்துகளை மதிப்பீடு செய்தல்,

**செயல்படுதல்:** பொறுப்புகளை கணித்தல், தேவையான பயிற்சிகளை வழங்குதல், திட்டங்களையும் & செயல்பாடுகளையும் அமல்படுத்துதல்

**சரிபார்த்தல்:** தரவு பெறுதல்,முடிவுகளை கண்காணித்து உறுதி செய்தல் (நீங்கள் தொடர்ந்து கண்காணிக்கும் போது)

**நிறைவேற்றுதல்:** கண்காணிப்பில் கண்டறியப்பட்ட பிரச்சனைகளை அடையாளப்படுத்தி, தலைமையேற்று முடிவுகளை மதிப்பாய்வு செய்தல். மேலும்,அதனைச் சரிசெய்வதற்கு என்ன முடிவுகள் அல்லது மாற்றங்கள் தேவைப்படும் என்பதைத் தீர்மானித்தல்.

மேற்கண்ட PDCA மாதிரியும்[4], மற்ற நிர்வாக அமைப்புக் கருவிகளும் ஒரு நிறுவனத்தின் தொடர் வளர்ச்சிக்கான மூல காரண பகுப்பாய்வை அமல்படுத்த உதவுகிறது.

---

[4] PDCA வரைபடம்

## E. பெண்களின் உரிமைகள் மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல்

Hershey நிறுவனம் பெண் உரிமைகளையும், பெண் அதிகாரத்தையும் ஊக்குவிப்பதில் மிகமுக்கிய பங்கு ஆற்றுகிறது. பெரும்பாலும் கலாச்சார விதிமுறைகள் மற்றும் வெவ்வேறு சட்ட சூழல்கள் காரணமாக ஒரு பணியிடத்தில் ஆண்களும், பெண்களும் வெவ்வெறு விதமான, தனித்தன்மையான பிரச்னைகளை சந்திக்கிறார்கள் என்பதை எங்களது அனைத்து வர்த்தக கூட்டாளர்களும் உணர வேண்டியது அவசியமாகும். மேலும், பெண்களுக்கு அவர்களுடைய இயற்கை வாழ்வியலால் (தாய்மை, குடும்பப்பணிகள்) அல்லது வேலையின் தன்மையால் சில கஷ்டங்களைச் சந்திக்கலாம். எனவே, பாலின பிரச்சினைகளை தீர்க்கும் வகையில், அவர்கள் தெரிவிக்கும் பின்வரும் சில செயல்பாடுகளைக் கருத்தில் கொள்ளும்படி எங்களுடைய வர்த்தக கூட்டாளர்களை ஊக்குவிக்கிறோம்.

- எந்த ஒரு நிலையிலும் பெண்கள் அவர்களுடைய பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்பட மாட்டார்கள், பணியாளர்களை கருத்தடை செய்யும்படி வற்புறுத்தப்பட மாட்டார்கள், வேலைவாய்ப்புக்கு பிரசவ சோதனை செய்யும்படி கட்டாயப்படுத்தபடுத்தப்பட மாட்டார்கள் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும்
- ஆண், பெண் பணியாளர்கள் மீதான தாக்கங்களை வித்தியாசப்படுத்தும் வகையில், பணியிடமும் நிர்வாகத் தரவும் பாலின அடிப்படையில் தனித்தனியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- குறைதீர்ப்பு வசதிகளை உருவாக்கும் போது, ஆண், பெண் பணியாளர்களின் தனிப்பட்ட தேவைகள் அல்லது பாலின உடல்,மன நிலைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்க வேண்டும்.
- கர்ப்ப காலத்தில் இருக்கும் பெண் ஊழியர்கள், பாலூட்டும் தாய்மார்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

பெண் உரிமை, பெண் அதிகாரம் பற்றிய கூடுதல் ஆதாரங்களுக்கு பின்இணைப்பு Bஜப் பார்க்கவும்.

## F. புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள்

Hershey உடனான சப்ளையர்களின் பரிவர்த்தனைகள் மற்றும் நல்லுறவை வெளிப்படுத்தும் விதமாக, சப்ளையர்களும் வர்த்தக கூட்டாளர்களும் பதிவேடுகளைப் பராமரிப்பதை Hershey எதிர்பார்க்கிறது. மேலும், அகக்கணக்கு கட்டுப்பாடுளுக்குத் தேவையான அமைப்பை உருவாக்கி, அதனை பராமரிப்பதும் எதிர்பார்க்கிறது. சப்ளையர்களும், வர்த்தக கூட்டாளர்களும் அனைத்து பதிவுகளையும் முழுமையாக வைத்திருக்க வேண்டும். மேலும், வெளிநாட்டு ஊழல் நடைமுறைச் சட்டம் உட்பட சிறந்த நடைமுறைகள் மற்றும் சட்டங்களைத் தக்கவைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு சப்ளையரும் உண்மைகளை துல்லியாமாகவும், நேர்மையாகவும், நடுநிலைத்தன்மையுடனும் பதிவு செய்ய வேண்டும். சப்ளையர்களும், வர்த்தக கூட்டாளர்களும் மறைக்கவோ, பதிவு செய்யத் தவறவிடவோ, தவறான உள்ளீடுகளை செய்யவோ கூடாது. அனைத்து நிதி புத்தகங்களும், பதிவுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின்படி இருக்க வேண்டும்.

## G. எழுப்ப வேண்டிய மற்றும் அறிக்கையிடக்கூடிய பிரச்சனைகள்




நெறிமுறைகள், கொள்கை அல்லது சட்டம், எங்கள் சப்ளையர் நடத்தை விதிமுறை அல்லது இந்த வழிகாட்டுதல் ஆவணம் தொடர்பாக உண்மையான அல்லது சந்தேகத்திற்குரிய மீறல்கள் தொடர்பான புகார்களுக்கு சப்ளையர்கள் மற்றும் வர்த்தக கூட்டாளர்கள் பொறுப்பு ஆவார்கள். புகார் அளித்தால் தங்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அச்ச உணர்வு பணியாளர்களிடத்தில் இல்லாத வகையில், பணியாளர்கள் எந்தவொரு வருத்தங்களையோ, விதிமீறல் தொடர்பான புகார் அளிக்கவோ வேண்டும். அதற்கு ஏற்றவாறு சப்ளையர்கள் பணியாளர்களுடன் இணக்கமாகத் தொடர்புகொள்ள வேண்டும். சப்ளையர் நடத்தை விதிமுறை மீறல், நெறிமுறைகள் மீறல், கொள்கை அல்லது சட்ட மீறல் போன்ற எந்தவொரு மீறல்கள் நடந்தாலும், சப்ளையர்களும் அவர்களின் பணியாளர்களும் உடனடியாக Hersheyக்கு தெரிவிக்க வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்புத் தகவலுடன் Hershey இன் நெறிமுறைகள் மற்றும் இணக்கத் திட்டம், Hershey இன் சட்டத் துறை அல்லது Hershey இன் சம்பந்தப்பட்ட ரகசிய தொடர்புகள் ஆகியவற்றின் வழியாக அறிக்கைகள் வழங்கப்படலாம். ஒவ்வொரு அறிக்கைக்கும் நாங்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம், ஒரு சப்ளையருக்கு எதிராக Hershey பணியாளர் எந்தவொரு எதிர்ப்புகளையும் பொறுத்துக்கொள்ள மாட்டார், அவர் நல்ல நம்பிக்கையுடன் தனது கவலையைப் புகாரளித்துள்ளார் அல்லது விசாரணையில் எங்களுடன் ஒத்துழைத்தார்.

www.HersheysConcern.com; ethics@hersheys.com

சட்டத்துறை, Hershey நிறுவனம்
19 East Chocolate Avenue, Hershey, PA 17033 USA

## H. எங்களைத் தொடர்பு கொள்ள

எங்களுடைய திட்டத் தேவைகள் மற்றும் ஒட்டுமொத்த பொறுப்பு ஆதாரப் பணிகளைப் பற்றிய பொதுவான கேள்விகளுக்கு இந்த மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும் responsiblesourcing@hersheys.com

## இணைப்பு A : Hershey நிறுவனத்தின் சகிப்புத்தன்மை இன்மை மற்றும் சிக்கலான மீறல்கள்

### மீறல்களுக்குச் சகிப்புத்தன்மை இன்மை

மீறல்களுக்குச் சகிப்புத்தன்மை இன்மையானது தனிப்பட்ட உரிமைகள், வாழ்க்கைப் பாதுகாப்பு மற்றும் / அல்லது Hershey பெருநிறுவனத்தின் நற்பெயருக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும்.

ஏற்கனவே உள்ள சப்ளையர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மீறல்களுக்குச் சகிப்புத்தன்மை இல்லாததைக் கண்டறிந்தால், அவர்களின் Hershey உறவுமுறை மேலாளர் மற்றும் IPM ஆகியோரிடம் அறிவிக்கப்படும். சப்ளையரின் CAPR, அவர்களது அறிக்கையைப் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் Hershey மற்றும் அவர்களின் IPM இல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். CAPR இல் எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள், மூல காரண பகுப்பாய்வு மற்றும் செயல்படுத்தப்படும் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

சப்ளையர், மீறல்களுக்குச் சகிப்புத்தன்மையின்மையை சரியான கால கட்டத்தில் சரிசெய்ய விரும்பவில்லை அல்லது சரிசெய்ய முடியாத சந்தர்ப்பங்களில், சப்ளையரை இடைநீக்கம் செய்ய அல்லது அகற்றுவதற்கான உரிமையை Hershey கொண்டுள்ளது.

Hershey இன் திட்டத்தில் கீழ் பின்வரும் இணக்கமற்றவை சகிப்புத்தன்மையற்ற மீறல்களாகக் கருதப்படுகின்றன:

**குழந்தை தொழிலாளர்:**
- ILO மாநாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளபடி உழைப்பில் உள்ள குழந்தைகளின் சான்றுகள் 138 மற்றும் 182
- 18 வயதிற்கு உட்பட்ட தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பள்ளி அல்லது தொழிற்கல்வியில் ஈடுபடுத்துகிறது அல்லது குழந்தைகளை உடல், மன அல்லது உணர்வுபூர்வ வளர்ச்சியை ஆபத்துக்கு உள்ளாக்குகிறது
- பணிபுரியும் இளைஞர்கள் அபாயகரமான வேலையைச் செய்வதையும், இரவில் அல்லது கூடுதல் நேரத்தில் வேலை செய்வதையும் தங்கள் பள்ளிப்படிப்பைத் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் வகையில் வேலை செய்வதைக் கண்டனர்

**கட்டாயப்படுத்தபட்ட தொழிலாளர்:**
- சிறை தொழிலாளர், அடிமைத் தொழிலாளர், ஒப்பந்தம் செய்யப்பட்ட தொழிலாளர், கொத்தடிமை தொழிலாளர் அல்லது எந்தவொரு பணியாளரின் வற்புறுத்தலுக்கும் சான்றுகள்
- தனிப்பட்ட ஆவணங்கள் விருப்பமின்றி வைக்கப்படுகின்றன, அல்லது கோரப்படும்போது அணுகல் மறுக்கப்படுகிறது
- தொழிலாளர்கள் இயக்க சுதந்திரம் அல்லது அபராதம் இல்லாமல் வேலையை நிறுத்த இயலாமை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தினர்

**நெறிமுறை வணிக தரங்களின் மீறல்கள்**
- தாக்கத்தை ஏற்படுத்தும் பரிசுகள், பொழுதுபோக்கு அல்லது பிற உபசரணை ஆகியவைகளுக்கானச் சான்றுகள் அல்லது அரசாங்க ஏஜென்ட்கள் அல்லது கட்டுபடுத்தும் நிலையில் உள்ள எவரும் முடிவெடுப்பதில் தீவிரம் காட்டுதல்
- தனிப்பட்ட முறையில் பயனளிக்கும் அல்லது லஞ்சத்தால் பெறப்படும் வணிக வாய்ப்புகள், கமிஷன்கள் அல்லது சாதகமான நிதி ஏற்பாடுகளை வழங்குதல்
- வெளிநாட்டு ஊழல் நடைமுறைச் சட்டம் (FCPA) அல்லது பிற லஞ்ச ஒழிப்பு சட்டங்களின் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை மீறுதல்

**அவசர வாழ்க்கை - அச்சுறுத்தும் ஆரோக்கியம், தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் / அல்லது சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

**ஒப்புக் கொள்ளப்பட்ட காலக்கெடுவுக்குள் மீறலுக்குச் சகிப்புத்தன்மையின்மை அல்லது சிக்கலான (கீழே வரையறுக்கப்பட்ட) திருத்த நடவடிக்கைகளை முடிக்கத் தவறியது**

## சிக்கலான மீறல்கள்

சிக்கலான மீறல்கள் என்பது தனிநபரின் உரிமைகள், வாழ்க்கை பாதுகாப்பு மற்றும்/அல்லது Hershey பெருநிறுவனத்தின் நற்பெயருக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை ஆகும்.

தற்போதுள்ள சப்ளையர்களின் வசதியில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட சிக்கலான மீறல்களைக் கண்டறிந்தால், அவர்களின் Hershey உறவுமுறை மேலாளர், IPM ஆகியோருக்கு அறிவிக்கப்படும். சப்ளையரின் CAPR, அவர்களது அறிக்கையைப் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் Hershey மற்றும் அவர்களின் IPM இல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். CAPR இல் எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள், மூல காரண பகுப்பாய்வு மற்றும் செயல்படுத்தப்படும் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

சப்ளையர் உரிய காலக்கெடுவில் சிக்கலான மீறலைச் சரிசெய்ய விரும்பவில்லை அல்லது சரிசெய்ய முடியாத சந்தர்ப்பங்களில், சப்ளையரை இடைநீக்கம் செய்ய அல்லது அகற்றுவதற்கான உரிமை Hershey கொண்டுள்ளது.

பின்வரும் இணக்கமற்றவை Hershey திட்டத்தின் கீழ் சிக்கலான மீறல்களாகக் கருதப்படுகின்றன:

### குழந்தை தொழிலாளர்
ஊழியர்கள்/பணியாளர்களின் வயதைச் சரிபார்க்க எந்தச் செயல்முறையும் செய்யவில்லை

### கட்டாயப்படுத்தி பணிபுரியும் தொழிலாளர்
- பணத்தைக் கொடுத்து பணியாளரைச் சேர்த்தல், பணியமர்த்தல் அல்லது பிற கட்டணங்களுக்காக ஊழியர்கள் கண்டறியப்பட்டன
- ஒப்பந்தம்/நிபந்தனைகள் வேலைக்கு முன் விவாதிக்கப்படவில்லை

### ஊதியங்களும் பலன்களும்
- ஊழியர்களுக்குச் சரியான நேரத்தில் ஊதியங்கள் அல்லது பலன்கள் கிடைக்கவில்லை அல்லது கூடுதல் நேர ஊதிய விகிதங்கள் உட்பட சட்டரீதியாக அல்லது ஒப்பந்தப்படி செலுத்த வேண்டிய கட்டாய ஊதிய விகிதங்களுக்கு கீழே வழங்குவது

### நெறிமுறை வணிக தரங்களின் மீறல்கள்
- அமெரிக்க பொருளாதார ஒப்புதல்களுக்கு உட்பட்ட நபர்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பரிவர்த்தனைகள் உள்ளடக்குகின்றன
- ஏற்றுமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட உருப்படிகள் அல்லது தகவல்களை உள்ளடக்கிய சட்டவிரோத பரிவர்த்தனைகள்.

### கூட்டமைவின் சுதந்திரம்
- கூட்டமைவின் சுதந்திரம் மற்றும் கூட்டு சேர்ந்து பேரம் பேசுதல் அல்லது கூட்டமைவின் சுதந்திரத்தின் மாற்று வழிமுறைகளுக்கு முறையற்ற இடையூறு
- வர்த்தகச் சங்கங்கள் மற்றும்/அல்லது கூட்டு சேர்ந்து பேரம் பேசுதலில் பங்கேற்ற அல்லது பங்கேற்காத ஊழியர்களின் பாகுபாடு, பதிலடி, துன்புறுத்தல் அல்லது மிரட்டுதல்

### பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்
- பணி நியமனம் மற்றும் / அல்லது வேலைவாய்ப்பு முடிவுகளில் சரிபார்க்கப்பட்ட பாகுபாடு
- ஆலை நிர்வாகத்தால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாமல், அறிக்கையளிக்கப்பட்ட சரிபார்க்கப்பட்ட ஒழுக்கம், வன்முறை அச்சுறுத்தல்கள் அல்லது பிற வகையான துன்புறுத்தல்கள்

### குறை தீர்க்கும் வழிமுறைகள்
- அனைத்து தொழிலாளர்களாலும் அணுக இயலாத இரகசிய குறை தீர்த்தல் வழிமுறைகள்
- குறைகளைப் பதிவு செய்யும் தொழிலாளர்களுக்கு எதிரான செயல்பாடுகள்

### உடல்நலம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஒரு தனிநபரின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு கடுமையான அச்சுறுத்தலாக இருக்கும்.

# இணைப்பு B : சப்ளையர்கள் & வணிகக் கூட்டாளர்களுக்கான கூடுதல் மூலஆதாரங்கள்

### *முழுமையான தரநிலைகள் & வழிகாட்டுதல்கள்*

- உலகளாவிய மனித உரிமைகளின் பிரகடனம் https://www.un.org/en/universal-declaration-human-rights/
- பணியின்போது கடைபிடிக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் உரிமைகள் குறித்த ILOவின் அறிவிப்பு https://www.un.org/en/universal-declaration-human-rights/
- பன்னாட்டு நிறுவனங்களுக்கான OECD வழிகாட்டுதல்கள் https://www.oecdwatch.org/oecd-ncps/the-oecd-guidelines-for-mnes/
- வணிகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐநாவின் வழிகாட்டுதல் கோட்பாடுகள் https://www.ohchr.org/Documents/Publications/GuidingPrinciplesBusinessHR_EN.pdf
- ஐநா குளோபல் காம்பாக்டின் 10 கோட்பாடுகள் https://www.unglobalcompact.org/what-is-gc/mission/principles
- ETI அடிப்படை விதிகள் https://www.ethicaltrade.org/eti-base-code

### *மூலஆதாரத்திற்கான பொறுப்பான அணுகுமுறைகள்*

- பொறுப்பான மூலஆதாரக் கருவி: https://www.responsiblesourcingtool.org/
- எய்ம் ப்ரோக்ரஸ் பொறுப்பான மூலஆதார பயணம் https://aim-progress.com/storage/resources/responsible-sourcing-journey-v1.0-oct2016.pdf
- சப்ளையர்களுக்கான வணிக கருவித்தொகுப்பு https://aim-progress.com/files/125/business-toolkit-complete-final-20-feb-2018.pdf

### *திறனுள்ள மேலாண்மை அமைப்புகளை உருவாக்குதல்*

- சமூக மற்றும் தொழிலாளர் மேலாண்மை அமைப்புகள் குறித்த உலகளாவிய சமூக நல்லிணக்க திட்ட குறிப்பு கருவி: https://www.theconsumergoodsforum.com/wp-content/uploads/2018/01/GSCP_Reference_Tools_SLMS_interactive.pdf
- தரத்திற்கான கையேட்டில் Hershey கம்பெனி பங்குதாரராக உள்ளது https://www.thehersheycompany.com/content/dam/corporate-us/documents/partners-and-suppliers/Supplier%20Quality%20Expectations%20Manual%202017%20new%20logo%20final.pdf

### *கட்டாய தொழிலாளர் மற்றும் நெறிமுறை நியமனம்*

- IHRB பொறுப்பு நியமனம் https://www.ihrb.org/uploads/member-uploads/Six_Steps_to_Responsible_Recruitment_-_Leadership_Group_for_Responsible_Recruitment.pdf
- Verité வில் உதவி தேவைப்படுபவர்களுக்கான கருவித் தொகுப்பு https://www.verite.org/help-wanted/
- பொறுப்பு நியமன கருவித்தொகுப்பு https://responsiblerecruitmenttoolkit.org/about-rrt/

### *குழந்தை தொழிலாளர்*

- வணிகத்திற்கான ILO- IOE வழிகாட்டுதல் கருவி https://www.unglobalcompact.org/library/3881
- நியாயமான தொழிலாளர் சங்கம் https://www.fairlabor.org/topic/child-labor

### *கூடுதல் தலைப்புகள்*

- குறை தீர்த்தல் வழிமுறைகள்: https://www.shiftproject.org/resources/publications/remediation-grievance-mechanisms-corporate-responsibility-respect-human-rights/

- பெண்கள் அதிகாரம்: https://www.unglobalcompact.org/take-action/action/womens-principles

o ஐநா வழிகாட்டுதல் கோட்பாடுகளில் பாலின பரிமாணங்கள்

o https://www.bsr.org/reports/BSR_Gender_Equality_in_Codes_of_Conduct_Guidance.pdf

- பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்: https://www.ilo.org/empent/areas/business-helpdesk/faqs/WCMS_DOC_ENT_HLP_BDE_FAQ_EN/lang--en/index.htm